பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 05 2025 **SATURDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. அரசு நிர்வாகத்தில் அனைத்து துறைகளிலும் தொழில்நுட்பம் கூடுதலாக பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. கேலோ இந்தியா வடகிழக்கு விளையாட்டுப் போட்டிகள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

3. நாடுமுழுவதும் ஒரு லட்சம் மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி வழங்கப்படவுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. ஜார்க்கண்டில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் மூன்று நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

5. டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியின் கேப்டனாக சுப்மன் கில் அறிவிக்கப்பட்டுள்ளார்.

**>>>>>><<<<<**

அரசு நிர்வாகத்தில் அனைத்து துறைகளிலும் தொழில்நுட்பம் கூடுதலாக பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற நித்தி ஆயோக் அமைப்பின் ஆட்சிமன்றக்குழு கூட்டத்தில் நிறைவுரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற உத்வேகம் மாநில அரசுகளுக்கும் உள்ளது இக்கூட்டத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த உத்வேகத்தை மாவட்டம் மற்றும் கிராமங்களுக்கு கொண்டு செல்ல மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

இந்தக் கூட்டத்திற்குப் பின்னர் நித்தி ஆயோக் அமைப்பின் தலைமை செயலதிகாரி திரு. **B.V.R.** சுப்பிரமணியம் செய்தியாளர்களிடம் பேசினார்.

நித்தி ஆயோக் ஆட்சிமன்ற குழுக் கூட்டங்களில் இதுவரை இல்லாத அளவிற்கு 31 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றதாக அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான தொலைநோக்கு திட்டத்தை வகுக்குமாறு பிரதமர் திரு. நரேந்திர மோடி மாநில அரசுகளை இக்கூட்டத்தில் வலியுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆப்பரேஷன் சிந்தூர் வெற்றிக்காக அனைத்து மாநில அரசுகளும் தங்களது ஒருமித்த ஆதரவை ராணுவத்திற்கு வழங்கியதாக திரு. **B.V.R.** சுப்பிரமணியம் கூறினார்.

**>>>>>><<<<<**

ஆப்பரேஷன் சிந்தூர் குறித்தும், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைப்பதற்காக மத்திய அரசு நியமித்த திமுகவைச் சேர்ந்த திருமதி. கனிமொழி தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழுவினர் ரஷ்யா சென்றடைந்தனர்.

மாஸ்கோவில் உள்ள இந்திய தூதரக அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய திருமதி. கனிமொழி, பஹல்காம் தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவித்தார்.

இதற்கு, பாகிஸ்தான் ஆதரவிலான தீவிரவாத அமைப்பு ஒன்று பொறுப்பேற்றுக் கொண்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியா, ஆப்பரேஷன் சிந்தூரை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

தீவிரவாத கட்டமைப்பு மற்றும் தீவிரவாதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில், பொதுமக்கள் யாரும் பாதிக்கப்படவில்லை என்று அவர் கூறினார்.

இந்தியாவின் நிலைப்பாட்டை உலக நாடுகளுக்கு எடுத்துரைப்பதற்கு தங்களுக்கு சிறப்பான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் திருமதி. கனிமொழி தெரிவித்தார்.

முன்னதாக, இக்குழுவினர் தூதரக அலுவலகத்தில் உள்ள தேசப்பிதா மகாத்மா காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர்.

இதேபோல், ஐக்கிய ஜனதா தள் கட்சியைச் சேர்ந்த திரு. சஞ்சய் ஜா தலைமையிலான குழுவினர், தங்களது ஜப்பான் பயணத்தை முடித்துக் கொண்டு தென்னாப்பிரிக்கா புறப்பட்டுச் சென்றனர்.

முன்னதாக, ஜப்பானில் உள்ள இந்திய தூதரக அலுவலகத்தில் இந்திய வம்சாவளியினருடன் அவர் கலந்துரையாடினார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கும், பாகிஸ்தானுக்கும் உள்ள தொடர்பு குறித்து அவர் எடுத்துரைத்தார்.

ஆப்பரேஷன் சிந்தூர் மூலம், பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீரில் உள்ள தீவிரவாத முகாம்கள் எவ்வாறு சிதைக்கப்பட்டன என்பது குறித்தும் அவர் விளக்கினார்.

இந்தியாவை பொறுத்தவரை தீவிரவாதத்தை ஒடுக்குவதில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் திரு. சஞ்சய் ஜா தெரிவித்தார்.

இதற்கிடையே, காங்கிரஸை சேர்ந்த திரு. சசிதரூர் தலைமையிலான குழுவினர் கயானா புறப்பட்டுச் சென்றனர்.

இதுதொடர்பாக காணொலி ஒன்றை வெளியிட்டுள்ள திரு. சசிதரூர், அமைதி மற்றும் நம்பிக்கைக்கான பயணமாக இது அமையும் என்று கூறியுள்ளார்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை உலக நாடுகளுக்கு எடுத்துரைக்கவுள்ளதாகவும் திரு. சசிதரூர் தெரிவித்தார்.

கயானாவிற்குப் பின்னர் அமெரிக்கா செல்லும் இக்குழுவினர், பனாமா, பிரேஸில், கொலம்பியா ஆகிய நாடுகளுக்கும் செல்கின்றனர்.

>>>>>><<<<<

கேலோ இந்தியா வடகிழக்கு விளையாட்டுப் போட்டிகள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வடகிழக்கு மாநிலங்களில் உள்ள இளையோரின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் இந்தப் போட்டிகள் நடத்தப்படும் என்றார்.

2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கு உரிமை கோரவுள்ளதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

>>>>>><<<<<

நாடுமுழுவதும் ஒரு லட்சம் மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி வழங்கப்படவுள்ளதாக மத்திய திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புவரையிலான மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் இதற்கான திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்தார்.

பட்டப் படிப்புகளில் தொழில் பழகுநர் பயிற்சியையும் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்ததும், அதன் தமிழாக்கத்தை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**>>>>>><<<<<**

ஜார்க்கண்டில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் மூன்று நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**Latehar** மாவட்டத்திற்கு உட்பட்ட **Salaiya** வனப்பகுதியில் நக்ஸலைட்டுகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து, பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இதில் 10 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்த நக்ஸலைட்டுகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான **Pappu Lohara** சுட்டுக் கொல்லப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

**>>>>>><<<<<**

நாட்டு மக்கள் அனைவருக்கும் குறைந்த செலவில் உயரிய மருத்துவ சிகிச்சை வழங்குவதை உறுதி செய்வதற்காக மாநில அரசுகளுடன், மத்திய அரசு இணைந்து செயல்பட்டு வருவதாக சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வடகிழக்கு மாநிலங்களில் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கு தனியார் துறையினரும் பங்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**>>>>>><<<<<**

ஹஜ் புனித பயணத்திற்காக மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு யாத்ரிகர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்பவர்கள் எவ்வித சிரமத்தையும் எதிர்கொள்ளக்கூடாது என்பதற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சிறுபான்மையினர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இதற்காக மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை பட்டியலிட்டுள்ளார்.

இதன் காரணமாக, ஹஜ் யாத்ரிகரிகள் பலரும், தங்களது பயணம் சிரமமின்றி இருந்ததாகவும், இதற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்.

**>>>>>><<<<<**

குஜராத் மாநிலத்தை ஒட்டிய எல்லைப்பகுதியில் ஊடுருவ முயன்ற பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஒருவரை பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

சர்வதேச எல்லைக் கோட்டை தாண்ட அந்த நபர் முயற்சித்ததாகவும், இதனையடுத்து பாதுகாப்புப் படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனையடுத்து, அப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

**>>>>>><<<<<**

ஜம்மு காஷ்மீரின் **Toda** மாவட்டத்திற்கு உட்பட்ட **Bhaderwah** பகுதியில் மொபைல் மற்றும் இணையதள சேவையை வரும் 27ஆம் தேதிவரை தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் உள்துறை, இதற்கான உத்தரவினை பிறப்பித்துள்ளது.

பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் தேச விரோத சக்திகள் செயல்படக்கூடும் என்பதை கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜம்மு காஷ்மீர் அரசு தெரிவித்துள்ளது.

**>>>>>><<<<<**

சூடானுக்கு எதிராக புதிய பொருளாதார தடைகளை விதிக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

அந்நாட்டில் நடைபெற்று வரும் சண்டையில் ரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியதன் காரணமாக, அமெரிக்கா இந்த முடிவினை மேற்கொண்டது.

**>>>>>><<<<<**

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலிருந்து ரோஹித் சர்மா ஓய்வு பெற்றதை அடுத்து, கேப்டனாக சுப்மன் கில் நியமிக்கப்பட்டுள்ளார்.

18 பேர் கொண்ட இந்த அணியில், தமிழகத்தைச் சேர்ந்த வாஷிங்டன் சுந்தர் மற்றும் சாய் சுதர்ஸன் இடம்பெற்றுள்ளனர்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதலாவது போட்டி, அடுத்த மாதம் 20ஆம் தேதி **Lords-**ல் தொடங்குகிறது.

**>>>>>><<<<<**

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியாவின் **Naraen Pranav** வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜெர்மனியின் **Suhl-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 10 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் நீடிக்கிறது.

**>>>>>><<<<<**

ஆஸ்திரிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Adita Rao** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 24-22 என்ற செட்கணக்கில் இங்கிலாந்தின் **Freya Redfearn-** ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் **Aalisha Naik** வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் **Aditi Bhatt – Deepshikha Singh** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>><<<<<**

தாய்லாந்து ஓப்பன் குத்துச்சண்டை போட்டி, பாங்காக்கில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் ஆடவர் பிரிவில் 10 பேரும், மகளிர் பிரிவில் 9 பேரும் இதில் பங்கேற்றுள்ளனர்.

**>>>>>>end<<<<<**